(5) அறிக்கைகள் அளித்தல்.

(அ) கைத்தறி இயக்குநர் அலுவலகம் பற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

(ஆ) வனத் துறை குறித்த மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கை.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :—

1. கைத்தறி இயக்குநர் அலுவலகம் பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய (15-வது) அறிக்கை.

2. வனத்துறை குறித்த (16-வது) அறிக்கை.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனைவரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. P. U. SHANMUGAM : I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.